





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 23.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்










We Shine Academy

- நகர்புற கழிவுநீர் ஓடைகளை சுகாதாரமான மறுபயன்பாட்டிற்காக உள்ளூரிலேயே சுத்திகரிக்கும் **LOTUSHR** என்ற புதிய திட்டத்தினை **(LOTUSHR – Local Treatment Of Urban Sewage Streams for Healthy Reuse),** புதுடெல்லியின் **சன்டயல் பூங்காவில்** மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் துவக்கி வைத்தார்.
    - இத்திட்டமானது, **இந்திய மற்றும் டச்சு** விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சி ஆகும்.

- நாட்டிலேயே முதன் முறையாக, உத்திரப்பிரதேச காவல்துறையானது, தொலைபேசி அழைப்பு வாயிலாக முதல் தகவல் அறிக்கை **(FIR – First Information Report)** பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
    - இதன் மூலம் வழக்கமான குற்றங்களை உத்திரப்பிரதேச காவல்துறை தொலைபேசி எண்ணான 100 என்ற எண்ணுக்கு அழைத்து தொலைபேசி அழைப்பு வடிவத்திலான முதல் தகவல் அறிக்கையை (FIR) பதிவு செய்ய முடியும்.

- **குறிப்பு**
    - குற்றங்களை தடுப்பதற்காக பஞ்சாப் மாநிலத்திற்கு பிறகு, சுமார் 1 லட்சம் சிறிய மற்றும் பெரிய குற்றவாளிகளின் தகவல் அடங்கிய நேரடி இணையதள தொகுப்பு ஒன்றை தயாரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- அணுசக்தி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பாதுகாப்பு ஒத்துழைப்பில் **IAEA-ன் (International Atomic Energy Agency)** வேலைகளை வலுப்படுத்தும் வகையில், **62-வது IAEA-வின் பொது மாநாடு** ஆஸ்திரியாவின் வியன்னாவில் நடைபெற்றுள்ளது.

- இம்மாநாட்டில், இந்தியா, சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) பாதுகாப்பு விதிகளின் கீழ் மேலும் நான்கு அணுஉலைக் கூடங்களை கொண்டு வர முடிவெடுத்திருக்கின்றது.

- குறிப்பு:
  - இதன் மூலம் தற்போது IAEA-வின் பாதுகாப்பு விதிகளின் கீழ் மொத்தம் 26 இந்திய அணுஉலைக் கூடங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

- தேசிய சுகாதார பாதுகாப்புத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் **(AB – NHPM : Ayushman Bharat – National Health Protection Agency)** –ஐ செயல்படுத்தும் தேசிய சுகாதார நிறுவனமானது **(NHA – National Health Agency)** பயனாளர்கள் தங்கள் பதிவுகளை சோதித்துக் கொள்ள **mera.prnjay.gov.in** என்னும் வலைதளத்தையும், **14555** என்ற உதவி எண்ணையும் தொடங்கியுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **ஐ.நா. பொதுச்சபையின் 73-வது கூட்டம், 2018** ஆம் ஆண்டு செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 1 ஆம் தேதி வரை, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற உள்ளது.
  - இந்த பொதுக்கூட்டத்தில் உலகநாடுகளின் தலைவர்கள் பங்கேற்று, நடப்பு ஆண்டில் உள்ள முக்கிய விவகாரங்கள் குறித்து பொதுவிவாதம் நடத்துவார்கள். இந்நிலையில், இந்தியாவின் சார்பாக இக்கூட்டத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் **“சுஷ்மா சுவராஜ்”** பங்கேற்க உள்ளார்.

- **நைஜரின்** தலைநகரான **நியாமேயில் (Niamey)** இந்திய அரசாங்கத்தின் மானிய உதவியுடன் **மகாத்மா காந்தி சர்வதேச மாநாட்டு மையத்தை (MGICC – Mahatma Gandhi International Convention Center)** செயல்படுத்த இந்தியா மற்றும் நைஜர் நாடுகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- 2022-ஆம் ஆண்டில் **ஆசிய பாரா** விளையாட்டு போட்டிகளின் நான்காவது பதிப்பை சீனாவின் ஹான்ங்ஷோ-வில் நடத்த இருப்பதாக ஆசியன் பாரா ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது.
  - மூன்றாவது ஆசிய பாரா விளையாட்டு போட்டி 2018 ஆனது இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் நடைபெற உள்ளது.

- FIFA சர்வதேச கால்பந்து அணிகளுக்கான தரவரிசை வரலாற்றில் முதல் முறையாக, **பிரான்சு மற்றும் பெல்ஜியம்** ஆகிய இரு அணிகள் முதலிடத்தைப் பகிர்ந்துள்ளன.

## நியமனங்கள்

- இந்தியாவின் அண்டை நாடான நேபாளம், வரும் 2020-ம் ஆண்டை **“நேபாளத்தை காண வாருங்கள்”** என்னும் தலைப்புடன் சுற்றுலா ஆண்டாக அனுசரிக்க தீர்மானித்துள்ளது.
  - மேலும், இந்தியாவில் இருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க, நேபாள அரசு அந்நாட்டின் சுற்றுலா மற்றும் கலாச்சாரம் துறையின் நல்லெண்ண தூதராக நடிகை **“ஜெயப்பிரதாவை”** நியமித்துள்ளது.